**சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2023**

---

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்ற அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற 2023 ஆம் ஆண்டுக்காக மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களை கணக்காய்வுக்காக சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(2)(இ) ஆம் பந்தி | உரிய பணி நிறைவடைந்தவுடன் பெற்றுக்கொண்ட உப | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் வழங்கப்ப்ட்ட ரூபா 1,004,938 கூட்டுத்தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | வழங்கப்பட்ட முற்பணத்தை தீர்ப்பதற்குரிய துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 756, 757 | மீளாய்வாண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 502(2) | ஒவ்வொரு சொத்து உருப்படி தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிலையான வைப்புகள் பதிவேடொன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவு | வருடாந்த பெறுகைகள் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகளுக்கான நிறுவன நல்லாளுகை வழிகாட்டிக் கோவையின் பின்னிணைப்பு 1 | ஒவ்வொரு பணிக்காகவும் திட்டவட்டமான கால இலக்குகளை குறிப்பிட்டு 2023 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரிப்பதற்கு | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகளுக்கான நிறுவன நல்லாளுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயல்நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2020 திசெம்பர் 01 ஆந் திகதிய அமப/20/1716/313/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் போது பொது கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 72,240,700 தொகை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்துவதற்கு மன்றம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்குகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| ரம்பொட தொண்டமான் ஞாபகார்த்த மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக மன்றத்தினால் 2010 ஆம் ஆண்டின் போது பணி முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 7,544,265 தொகை மீளாய்வாண்டு வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே, இந்த நிர்மாணங்கள் 2013 செப்தம்பர் மாத்தில் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்காத காரணத்தால் ரூபா 25,678,995 தொகை குறை வேலையாக காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்கு மற்றும் நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரம்பொட கலாசார மத்திய நிலையத்திற்காக நிதிக் குத்தகை முறைமையின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 5,840,000 இற்கு டபள் கெப் வண்டியொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த துடன், 2015 பெப்ரவரி மாதம் முதல் தவணைப் பணம் செலுத்தாமையின் அடிப்படையில் இந்த வண்டி நிதிக் கம்பனியால் மீள கைப்பற்றப்பட்டிருந்தது. அதற்கமைய செலுத்தப்பட்ட ரூபா 1,565,504 ஆன தொகை மன்றத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2011 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியினுள் கள இணைப்பு படிகளை செலுத்துவதற்காக மன்றத்தினால் இரு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 4,252,500 ஆன தொகையை முறைகேடாக பயன்படுத்தலுடன் தொடர்புடையதாக 2013 யூலை 24 ஆந் திகதிய ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் உரிய ஊழியர்களிடமிருந்து தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,202,500 இனை அறவிடுவதற்காக உரிய நடவடிக்கைகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முன்னெடுக்கப்படவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மன்றத்தின் தலைமை அலுவலகம் கொழும்பில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரசிற்குரிய கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படும் காலத்தினுள் அதன் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக மன்றத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 2,457,239 ஆன தொகையை அறவிடுமாறு 2012 நவம்பர் 07 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு மன்றம் தவறியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் பல்வேறு பணிகளுக்காக தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 13,195,262 ஆன முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிராததுடன், சுய தொழில் முயற்சிகளுக்காக வெளிவாரித் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 685,392 தொகையான கடன் மீதி மற்றும் ஊழியர் கடன் மீதி ஆகியவை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | தொண்டமான் விளையாட்டு கட்டிடத் தொகுதி, தொண்டமான் கலாசார மத்திய நிலையம் மற்றும் தொண்டமான் தொழில் | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இடங்களின் உரித்தினை சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயிற்சி நிலையம் அமைந்துள்ள இடங்களின் உரித்தினை மன்றத்திற்கு சுவீகரிப்பதற்கு ஒவ்வொரு காணியின் பெறுமதியையும் மதிப்பீடு செய்து பெறுமதியை தனித்தனியாக இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 35 பிரஜாசக்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்காக காணிகளை சுவீகரிக்காது 2012 ஆம் ஆண்டு காணி அளவீட்டு நடவடிக்கைகளுக்காக ரூபா 2,359,298 செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | சுயதொழில் கடன் செயற்திட்டத்தின் கீழ் பிரஜாசக்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கு 2014 திசெம்பர் 01 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 736,000 பெறுமதியான 8 சீமெந்து அச்சுக்கல் மெஷின்கள் சுயதொழிலாளர்களுக்கு வழங்கப்படாது 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நோர்வுட் பிரஜாசக்தி நிலையத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை துரிதமாக ஆரம்பித்து, குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | ரூபா 19,072,566 மதிப்பீட்டு பெறுமதியுடைய டயகம மற்றும் வட்டகொட பிரஜாசக்தி நிலையங்களின் கோபுர நிர்வாகம், ஆடு வளர்ப்பு மற்றும் காளான் வளர்ப்பு மற்றும் பொலித்தீன் வீடமைப்பு சார்ந்த 02 செயற்திட்டங்களுக்காக 2022 ஆம் ஆண்டளவில் ரூபா 10,001,629 செலவிடப்பட்டிருந்த | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதியை உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தக்கூடிய வகையில் செலவிடப்பட வேண்டும். அவ்வாறே இந்த செயற்திட்டங்களை இடைநடுவில் நிறுத்தியமையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், 2023 ஒக்தோபர் மாதமளவில் இந்த 02 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்த காரணத்தால்ட செலவிடப்பட்ட மொத்த தொகையும் விளைவற்றதாகியிருந்தது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | ரூபா 3,443,884 ஒப்பந்தப் பெறுமதியுடைய ''சாலை ஓரம்'' எனும் சிற்றுண்டிச்சாலையொன்று தலவாக்கலை பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 1,519,486 தொகை ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தை முன்னோக்கி செயற்படுத்துவதற்கு கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 15 ஆந் திகதி வரையிலும் காணிக்கு உரியதாக மின்சார சபை கிடைத்திருக்காத காரணத்தால் நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்டுள்ள ரூபா 1,519,486 ஆன செலவினம் விளைவற்றதாகியிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை ஆக்கபூர்வாக பயன்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 05 பாடநெறிகளுக்குரிய பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,888,800 பெறுமதியான 99 உபகரணத் தொகுதிகளின் பெறுமதி ரூபா 2,790,740 தொகையான 69 உபகரணத் தொகுதிகள் வெளிவாரித் தரப்பினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அரச வளங்களை உச்ச செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

அதன் பிரகாரம் அந்த உபகரணங்களை உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை என்பது மற்றும் அது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது.